ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2036/23 - 2017 සැප්තැම්බර් මස 13 වැනි බදාදා - 2017.09.13

*2036/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைகள் கட்டணச் சட்டம்**

*2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டண (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2017, செத்தெம்பர் 12.

ஒழுங்குவிதிகள்

1. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் தொடர்புடையதாக 2007, யூன் 20 ஆந் திகதிய 1502/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2007, யூலை 18 ஆந் திகதிய 1506/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி, 2008 ஏப்பிறல் 22 ஆந் திகதிய 1546/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி என்பவற்றினால் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதிகள், அதன்கீழ் இதற்கு முன்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் தப்பெண்ணம் ஏற்படாதவிதத்தில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

2. (1) ஒழுங்குவிதி 03 அல்லது 04 இன் ஏதேனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆள் ஒருவர் அல்லது பங்குடைமையொன்று பின்வருவனவற்றைச் செய்ய முடியும் :

(i) அந்த வியாபாரத்தின் மூலம் அல்லது வர்த்தகத்தின் மூலம் அக்காலாண்டிற்கான புரள்வை அப்பந்திக்கு இணங்கத் தீர்மானித்தல்,

(ii) மேற்குறித்த சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளைப் புறக்கணித்தல்,

(iii) அவ்வாறு தீர்மானிக்கும் புரள்வு தொடர்பில் மேற்படி சட்டத்தின் IV ஆம் அட்டவணையின் 1 ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதத்தில் பொருளாதார சேவைகள் கட்டணத்தைக் கணித்தல்.

1A - G 26264 — 57 (2017/09)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) அவ்வாறு தெரிவுசெய்த ஆள் ஒருவர் அல்லது பங்குடைமையொன்று அனைத்து நோக்கங்களுக்காகவும் மேற்குறித்த சட்டத்தின் அட்டவணைக்கு ஏற்ப இணங்கி ஒழுகியவராகக் கருதப்படுவார்.

3. எவரேனும் கப்பற் சரக்கேற்றுநர் ஒருவரின் வியாபாரத்தின் அல்லது வர்த்தகத்தின் ஏதேனும் ஒரு காலாண்டுக்காக சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் பந்தி (ஆ) இற்கு இணங்க குறிப்பீடு செய்யப்பட்டுள்ள புரள்வில், எவரேனும் ஆளொருவருக்குச் சொந்தமான அல்லது அவ் ஆளினால் வாடகைக்குப் பெறப்பட்ட ஏதேனும் ஒரு கப்பலுக்கு அல்லது விமானமொன்றுக்கு ஏற்றப்படும் கப்பற் சரக்குகளை அவ் ஆளே போக்குவரத்துச் செய்வதற்காக அவ் ஆளுக்கு அந்த கப்பற் சரக்கேற்றுநர் செலுத்த வேண்டிய தொகையைக் கழிப்பது அவசியமாகும்.

4. வியாபாரத்தின் அல்லது வர்த்தகத்தின் ஏதேனும் ஒரு காலாண்டுக்காக -

(i) எவரேனும் ஆளொருவரினால் அல்லது பங்குடைமையொன்றினால் கொண்டுநடாத்தப்படும், பட்டை தீட்டப்படாத வடிவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட செப்பனிடப்படாத வைரங்களை அல்லது இரத்தினக் கற்களை வெட்டிப் பட்டை தீட்டி ஏற்றுமதி செய்யும் வியாபாரமொன்றின் அல்லது வர்த்தகமொன்றின் அக்காலாண்டுக்கான செப்பனிடப்படாத வைரங்களின் அல்லது இரத்தினக் கற்களின் CIF பெறுமதியை விஞ்சும் அத்தகைய ஏற்றுமதிகளின் FOB பெறுமதியின் மேலதிகப் பகுதி ;

(ii) எவரேனும் ஆளொருவரினால் அல்லது பங்குடைமையொன்றினால் கொண்டுநடாத்தப்படும் NFE அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை ஏற்றுமதி செய்யும் வியாபாரமொன்றின் அல்லது வர்த்தகமொன்றின் அக்காலாண்டுக்கான அத்தகைய மூலப்பொருட்களின் CIF பெறுமதியை விஞ்சும் அத்தகைய ஏற்றுமதிகளின் FOB பெறுமதியின் மேலதிகப் பகுதி ;

(iii) எவரேனும் ஆளொருவரினால் அல்லது பங்குடைமையொன்றினால் கொண்டுநடாத்தப்படும் NFE அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்பட்ட மேலே (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆடைகள் தவிர வேறு பொருளொன்றை ஏற்றுமதி செய்யும் வியாபாரமொன்றின் அல்லது வர்த்தகமொன்றின், அக்காலாண்டுக்கான அத்தகைய மூலப்பொருட்களின் CIF பெறுமதியை விஞ்சுகின்ற அத்தகைய ஏற்றுமதிகளின் FOB பெறுமதியின் மேலதிகப் பகுதி ;

(iv) எவரேனும் முதல் நிலை வியாபாரியொருவர் :

- பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்காக அக்காலாண்டில் முதலீடு செய்துள்ள தொகை ; மற்றும்
- அக்காலாண்டில் செய்யப்பட்ட ஏதேனும் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலொன்றுக்காகச் செலுத்திய வட்டி அல்லது வழங்கிய விலைக்கழிவு,

ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையை விஞ்சுகின்ற, அந்த முதல் நிலை வியாபாரியிடம் இருந்த பிணையங்களை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையின் மேலதிகப் பகுதி, அவ்வியாபாரத்தின் அல்லது வர்த்தகத்தின் புரள்வாகக் கருதப்பட வேண்டும்.

சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் புரள்வு எனும் வசனத்தின் பொருள்கோடலின் போது முறையே (அ) பந்தியின் மற்றும் (ஆ) பந்தியின் நிச்சயிக்கப்பட்ட குறிப்பிடப்பட்டுள்ள கழித்தல் மற்றும் கூட்டல் பற்றி உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

5. இவ் ஒழுங்குவிதிகளில் -

(i) ''கப்பல் சரக்கேற்றுநர்'' என்பது, கப்பல் சரக்கேற்றுநர் ஒருவராக செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்துள்ள -

- கப்பல் சரக்கேற்றுநர்களின் ''அனைத்து அபாய மற்றும் சட்டக் கடப்பாட்டு காப்புறுதிப் பூட்கை''யில் உள்ளடக்கப்பட்டுள்ள சரக்குப் போக்குவரத்து தொடர்பான ஆவணங்களை வழங்குகின்ற ; மற்றும்

- ஏதேனும் ஒரு காலாண்டுக்கான புரள்வு விபரத்திரட்டுடன் நாணயக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் நாணயக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் மூன்றாம் (3) அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட குறித்த காலாண்டில் உள்ளடங்கும் ஒவ்வொரு மாதத்திற்காகவும் நாணயக் கட்டுப்பாட்டாளருக்குச் சமர்ப்பித்த வெளிப்படுத்துகைகளின் பிரதிகள் மற்றும் நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்ட தேறிய வருமான வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிக்கும், ஆளொருவரை அல்லது பங்குடைமையொன்றைக் குறிக்கும்.

(ii) ''ஆள்'' என்பதில், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ள எவரேனும் ஆட்களும் உள்ளடங்குவர்.

(iii) ''முதல்நிலை வியாபாரி'' என்பதன் கருத்து, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 217 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள கருத்தை ஒத்ததாகும்.

(iv) ''பிணையம்'' என்பது -

(அ) பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) கீழ் விநியோகிக்கப்பட்ட பிணையங்களை அல்லது திறைசேரி முறிகளை ;

(ஆ) உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 417) கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களை ; அல்லது

(இ) நாணயச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 134 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணையங்களை

குறிக்கும்.

09-796

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.